பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளுக்கு எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் தொகுதி மேம்பாட்டு நிதி, வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியை பயன்படுத்த வேண்டும்

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுரை

சென்னை, செப்.5

சென்னை மாநகரப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பருவமழை முன்னேற்பாடு பணிகளில் எந்த தொய்வும் ஏற்படக்கூடாது. அதிகாரிகள் சமரசம் இன்றி பணியாற்ற வேண்டும் என்று ஆலோசனை கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கூறினார்.

பருவமழை முன்னெச்சரிக்கை பணிகளுக்கு எம்பி, எம்எல்ஏக்கள் தொகுதி மேம்பாட்டு நிதி, வார்டு உறுப்பினர் மேம்பாட்டு நிதியை பயன்படுத்த வேண்டும் என்று அமைச்சர் உதயநிதி அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாக கூட்டரங்கில் நேற்று, வடகிழக்கு பருவமழை முன்னேற்பாடு பணிகள் மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகள் தொடர்பாக 2வது ஆய்வு கூட்டம் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தலைமையில் நடந்தது.

இந்த கூட்டத்தில் அமைச்சர்கள் கே.என்.நேரு, சேகர்பாபு, எம்.பி.க்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, தமிழச்சி தங்கபாண்டியன், சசிகாந்த் செந்தில், மேயர் பிரியா, துணை மேயர் மகேஷ்குமார், மாநகராட்சி கமிஷனர் குமரகுருபரன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டம் தொடங்கியதும், சென்னையில் கடந்த ஆண்டு மழையின் போது மின்தடை தொடர்பாக அதிக புகார்கள் வந்தது. மின்தடை ஏற்படாமல் இருக்க என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என மின்வாரிய அதிகாரிகளிடம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி எழுப்பினார்.

அதற்கு, மின்தடை ஏற்படாமல் தடுப்பதற்கு பராமரிப்பு பணிகள் நடைபெற்று வருவதாகவும், அடுத்த

மாதம் 5ந் தேதிக்குள் அனைத்து பணிகளும் முடிவடையும் எனவும் அதிகாரிகள் விளக்கம் அளித்தனர். மேலும், வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு பணிகளை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார். தொடர்ந்து, மெட்ரோ ரெயில் அதிகாரிகளிடம் எம்.பி.க்கள் சரமாரியாக கேள்வி எழுப்பினர்.

மக்களை சந்திக்கும் போது மக்கள் எங்களை தான் கேள்வி கேட்பார்கள். ரெட்டேரி மற்றும் கொசஸ்தலையில் வெள்ளம் வரும் போது அதிக பகுதிகள் பாதிக்கப்படுகிறது. மழை நேரத்தில் அனைத்து பகுதிகளிலும் மின்சாரம் எப்போது வரும், தண்ணீர் எப்போது வெளியேற்றப்படும், பால் உள்ளிட்ட பொருட்கள் வழங்குவது தொடர்பாக ஒலி பெருக்கி மூலம் மக்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என எம்.பி.தயாநிதி மாறன் தெரிவித்தார்.

இந்த ஆய்வு கூட்டத்தில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

மழைநீர் வடிகால், கழிவுநீர் குழாய்களில் உள்ள அடைப்புகளை அகற்ற எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் கோரிக்கை வைத்துள்ளனர். அதில் எந்த சமரசமும் இல்லாமல் அதிகாரிகள் செயல்படுத்த வேண்டும். அதிகாரிகள் ஆய்விற்கு செல்லும் போது எம்.பி., எம்.எல்.ஏக்கள், கவுன்சிலர்களை அழைத்து செல்ல வேண்டும். மழை காலங்களில் மின்வாரிய பணிகள் மிகவும் அவசியமானது. நிதி பற்றாக்குறை காரணமாக பருவமழை முன்னேற்பாடு பணிகளில் தொய்வு ஏற்படுவதை மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மழைக்கால முன்னேற்பாடு பணிகளுக்கு அதிகாரிகள் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

இதேபோல, எம்.பி., எம்.எல்.ஏக்கள் தங்கள் தொகுதி மேம்பாடு நிதியை மழைநீர் வடிகால்வாய், கழிவு நீர் அகற்றுவது உள்ளிட்ட பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். மழைநீர் வடிகால் பணிகளின் நிலை குறித்து முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அமெரிக்காவில் இருந்து தொலைபேசி வாயிலாக கேட்டறிந்து வருகிறார். மழைகால பணிகளில் அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டு`ம். மழைநீர் வடிகால்வாய் பணிகள் குறித்து நேரில் ஆய்வு செய்ய உள்ளேன். இந்த ஆய்வு கூட்டம் குறித்து முதல்அமைச்சருக்கு அறிக்கை அளிக்கப்படும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விநாயகர் சதுர்த்தி, வார விடுமுறை: 2,315 சிறப்பு பஸ்கள் இயக்கம்

சென்னை, செப்.5

விநாயகர் சதுர்த்தி, வார விடுமுறையை முன்னிட்டு தமிழகம் முழுவதும் 2,315 சிறப்பு பஸ்கள் இயக்கப்படுவதாக அரசு விரைவு போக்குவரத்துக்கழகம் அறிவித்து உள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு விரைவு போக்குவரத்துக்கழக மேலாண் இயக்குனர் மோகன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

விநாயகர் சதுர்த்தி, வார விடுமுறை நாட்களை முன்னிட்டு 6ந் தேதி (வெள்ளிக்கிழமை) சுபமுகூர்த்தம், 7ந் தேதி (சனிக்கிழமை) விநாயகர் சதுர்த்தி, 8ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) வார விடுமுறை நாள் என தொடர் விடுமுறை தினங்களை முன்னிட்டு 5, 6 மற்றும் 7ந் தேதிகளில் சென்னையிலிருந்தும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக சென்னை கிளாம்பாக்கத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு, திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 5, 6 மற்றும் 7ந் தேதிகளில் ஆயிரத்து 30 பஸ்களும், மற்றும் 8ந் தேதி கிளாம்பாக்கத்திலிருந்து பல்வேறு ஊர்களுக்கு 725 பஸ்களும் இயக்கப்படுகிறது. சென்னை கோயம்பேட்டில் இருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 6 மற்றும் 7ந் தேதிகளில் 190 பஸ்களும், மாதாவரத்தில் இருந்து 6 மற்றும் 7ந் தேதிகளில் 20 பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்து பல்வேறு இடங்களுக்கும் 350 சிறப்பு பஸ்களும் இயக்க திட்டமிடப்பட்டு உள்ளது.

மேலும், ஞாயிற்றுக்கிழமை சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பஸ்கள் இயக்கிட திட்டமிடப்பட்டு உள்ளது.

மான்சூன் க்ராப்சைன்ஸ் எல்எல்பி

பதிவு அலுவலகம்: ஆர்எச்2 கீதா வில்லா, கீதா நகர், திண்டோரி சாலை, நாசிக், மகாராஷ்டிரா, 422 004

தமிழ்நாடு விற்பனை மற்றும் சேமிப்பு: கதவு எண்.3/210/A31, ஆசாத் நகர், கிருஷ்ணகிரி டோல்கேட் அருகில், கிருஷ்ணகிரி, கிருஷ்ணகிரி மாவட்டம், தமிழ்நாடு 635 001

இந்திய அரசின் வேளாண்மை கூட்டுறவு மற்றும் விவசாயிகள் நலத்துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட அக்டோபர் 24, 2015 தேதியிட்ட உத்தரவு எண். S.O.2900(E)ன்படி மான்சூன் க்ராப்சயின்ஸ் எல்எல்பி, கொடுக்கப்பட்டுள்ள விவரக்குறிப்பின்படி உர வகைகளின் புதிய 100% நீரில் கரையக்கூடிய கலவையை விற்க/சந்தைப்படுத்த உத்தேசித்துள்ளதாக இதன்மூலம் அறிவிக்கிறது:

(1) N:P:K- 00:05:27, மொத்த பாஸ்பரஸ் P205 : 5%, மொத்த பொட்டாசியம் K20: 27%
(2) N:P:K: MgO - 05:00:27 - 02, மொத்த நைட்ரஜன்: 5%, மொத்த பொட்டாசியம் K20: 27%, மொத்த மெக்னீசியம் MgO : 2%
(3) N:P:K :B:Mn:Fe — 07:21:07 - 0.02:01:01, மொத்த நைட்ரஜன்: 7%, மொத்த பாஸ்பரஸ் P205 :21%, மொத்த பொட்டாசியம் K20: 7%, மொத்த போரான்: 0.02%, மொத்த மாங்கனீசு Mn : 1%, மொத்த இரும்பு Fe : 1%
(4) N:P:K : Zn - 20:00:05 - 01, மொத்த நைட்ரஜன் : 20%, மொத்த பொட்டாசியம் K20: 05% ,மொத்த துத்தநாகம் : 1%
(5) N:P:K :05:00:30, மொத்த நைட்ரஜன் : 5%, மொத்த பொட்டாசியம் K20: 30%

மேல் குறிப்பிட்டுள்ள முறையில்,
(a) எடையின் அடிப்படையில் ஈரப்பதம் சதவீதம், அதிகபட்சம்: 0.5%
(b) மொத்த குளோரைடு சதவீதம் எடை, அதிகபட்சம் 1.5%
(c) சோடியம் Nacl , எடையில் சதவீதம், அதிகபட்சம் : 0.5%
(d) தண்ணீரில் கரையாத பொருள் சதவீதம் எடை, அதிகபட்சம் 0.5%
(e) எடையின் அடிப்படையில் ஈயம் (Pb) சதவீதம், அதிகபட்சம்: 0.003 %
(f) காட்மியம் (Cd) எடையின் சதவீதம், அதிகபட்சம்: 0.0025%
(g) ஆர்சனிக் (As) சதவீதம் எடை, அதிகபட்சம்: 0.01%

தொடர்பு
Email ID - info@monsooncrop.com Cust. Care No. +91 9823400035

Panasonic

பானசோனிக் அப்ளையன்சஸ் இந்தியா கம்பெனி லிமிடெட்

CIN: U30007TN1988PLC016184

பதிவு அலுவலகம் : தேசிய நெடுஞ்சாலை, எண்.5, சோழவரம் கிராமம், பொன்னேரி தாலுகா, சென்னை - 600 067. தொலைபேசி +91-44-26330397.

இணையதளம் : www.panasonicappliances.in மின்னஞ்சல்: papin.secretary@in.panasonic.com

முப்பத்து ஆறாவது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு பற்றிய தகவல்

கம்பெனி சட்டம், 2013-ன் பொருந்தக்கூடிய பிரிவுகள் மற்றும் அத்துடன் வாசிக்க வேண்டிய பொது சுற்றறிக்கை எண்.14/2020, தேதி ஏப்ரல் 8, 2020 சுற்றறிக்கை எண்.17/2020, தேதி ஏப்ரல் 13, 2020, சுற்றறிக்கை எண்.20/2020, தேதி மே 05, 2020, சுற்றறிக்கை எண்.02/2021, தேதி ஜனவரி 13, 2021 மற்றும் பொது சுற்றறிக்கை எண்.02/2022, தேதி மே 05, 2022 அதை தொடர்ந்து சுற்றிக்கை எண்.10/2022 மற்றும் 11/2022 தேதி டிசம்பர் 28, 2022 மற்றும் 09/2023 தேதி 25.09.2023 (கூட்டாக 'MCA சுற்றறிக்கைகள்' என குறிப்பிடப்படும்) இணங்க ஆகஸ்ட் 26, 2024 தேதியிட்ட வருடாந்திர பொதுக்கூட்டம் கூட்டுவது பற்றிய அறிவிப்பில் கண்டுள்ள அலுவல்களை செயல்படுத்த பானசோனிக் அப்ளையன்சஸ் இந்தியா கம்பெனி லிமிடெட் (கம்பெனி) அதன் உறுப்பினர்களின் **முப்பத்து ஆறாவது வருடாந்திர ஆண்டு பொதுக்கூட்டம்** (36வது AGM), **வியாழக்கிழமை, செப்டம்பர் 26, 2024** அன்று **காலை 10:30 மணிக்கு இந்திய நேரப்படி** காணொளி காட்சி ("VC") மற்றும் இதர அங்கீகரிக்கப்பட்ட ஒலி / காட்சி சார்ந்த வழிமுறைகள் ("OAVM") மூலமாக நடைபெறுகிறது என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

நிறுவனங்கள் (கணக்குகள்) விதிகள் 2014-ன் விதி 11-ன் படி வருடாந்திர பொதுக்கூட்ட அறிக்கை மற்றும் 2023-24-ம் நிதி ஆண்டுக்கான வருடாந்திர அறிக்கை ("வருடாந்திர அறிக்கை 2023-24") ஆகியவை ஆகஸ்டு 30, 2024 தேதி வரை நிறுவனத்திடம் அல்லது டெபாசிட்டரிகள் / டெபாசிட்டரி பங்கேற்பாளர்களிடம் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்த உறுப்பினர்களுக்கு மட்டும் **செப்டம்பர் 4, 2024** அன்று மின்னணு முறையில் (மின்னஞ்சல்) மூலம் அனுப்பப்பட்டுள்ளது. இந்த ஆவணங்கள் நிறுவனத்தின் இணையதளமான **www.panasonicappliances.in**-லும் மற்றும் நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் ("NSDL") இணையதளமான **www.evoting.nsdl.com**-லும் கிடைக்கப்பெறும்.

கம்பெனிகள் சட்டம், 2013 பிரிவு, 91 மற்றும் அத்துடன் வாசிக்க வேண்டிய கம்பெனி (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள் 2014-ன் விதி 10 மற்றும் இதர பொருந்தக்கூடிய விதிகள் ஏதேனும்யிருப்பின், வருடாந்திர பொதுக்கூட்டம் நடைபெறுவதையொட்டி கம்பெனியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு பரிமாற்ற புத்தகங்கள், **வெள்ளிக்கிழமை, செப்டம்பர் 20, 2024** தேதி முதல் **வியாழக்கிழமை, செப்டம்பர் 26, 2024 தேதி வரை (இரண்டு நாட்களும் சேர்த்து)** மூடப்பட்டிருக்கும்.

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 108 மற்றும் கம்பெனிகள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 அத்துடன் வாசிக்க வேண்டிய விதிகள் 20-ன் படி மின்னணு முறையில் உறுப்பினர்கள் வாக்குரிமையை அளிக்க மின்னணு வாக்குப்பதிவு வசதியை நிறுவனம் அளித்துள்ளது. மின்னணு வாக்குப்பதிவு வசதியை அளிக்க நேஷனல் செக்யூரிட்டீஸ் டெபாசிட்டரி லிமிடெட் (NSDL) உடன் ஒரு ஒப்பந்தத்தை நிறுவனம் செய்து கொண்டுள்ளது. கட் ஆப் தேதியான அதாவது **செப்டம்பர் 19, 2024** அன்று காகித வடிவில் அல்லது பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்துள்ள உறுப்பினர்கள், வருடாந்திர பொதுக்கூட்டத்தில் செயல்படுத்தப்பட உள்ள அலுவல்கள் மீது மின்னணு முறையில் வாக்களிக்க வசதியாக மின்னணு வாக்குப்பதிவு **திங்கட்கிழமை செப்டம்பர் 23, 2024 இந்திய நேரப்படி காலை 9.00 மணிக்கு** தொடங்கி **புதன்கிழமை செப்டம்பர் 25, 2024 இந்திய நேரப்படி மாலை 5.00 மணிக்கு** முடிவடைகிறது. மேற்சொன்ன தேதி மற்றும் நேரத்திற்கு பிறகு மின்னணு வாக்குப்பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது. மின்னணு வாக்குப்பதிவு நேர்மையாகவும் வெளிப்படையாகவும் நடைபெற திரு.எம்.அழகர், பிராக்டிசிங் நிறுவன செயலாளர் அவர்களை ஆராய்வாளராக நிறுவனம் நியமனம் செய்துள்ளது.

மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்தல்/புதுப்பித்தல் முறை கீழே தரப்பட்டுள்ளது :

- நிறுவனத்திடம் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை பதிவு செய்யாமல் / புதுப்பிக்காமல் காகித வடிவில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், **https://www.integratedindia.in/emailupdation.aspx**-ஐ கிளிக் செய்வதன் மூலமும் அல்லது போலியோ எண். மற்றும் பான் கார்டின் சுய சான்றளிக்கப்பட்ட நகலை இணைத்து **papin.secretary@in.panasonic.com**-க்கு எழுத்து மூலம் நிறுவனத்திற்கு அனுப்பி அவற்றை பதிவு செய்யலாம் / புதுப்பித்து கொள்ளலாம்.

பத்திரமில்லாத வகையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை தங்கள் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்யவில்லை / புதுப்பிக்கவில்லை என்றால் அவர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரிகளை அவர்கள் டீமேட் கணக்குகளை பராமரிக்கும் டெபாசிட்டரி பங்கேற்பாளர்களுடன் பதிவு செய்யுமாறு / புதுப்பிக்குமாறு கேட்டுக்-கொள்ளப்படுகிறார்கள்.

சரியான சரிபார்ப்பிற்குப் பிறகு, நிறுவனம்/ஒருங்கிணைந்தவர்கள் தங்கள் உள்நுழைவு சான்றிதழ்களை அவர்கள் பதிவு செய்த முகவரிக்கு அனுப்புவார்கள்.

- வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பை அனுப்பிய பின்னர் நிறுவனத்தின் உறுப்பினரான நபர், கட்ஆப் தேதியில் பங்குகளை வைத்திருக்கும் எந்தவொரு நபரும் பயனர் ஐடி மற்றும் பாஸ்வேர்டை வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் வழங்கப்பட்ட முறையில் பெறலாம். இது வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் மற்றும் நிறுவன இணையதளத்திலும் கிடைக்கிறது.
- அத்தகைய உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்ட அறிவிப்பில் நிறுவனத்தால் குறிப்பிடப்பட்ட முறைகளில் மின்னணு வாக்குப்பதிவு வழிமுறைகளைப் பயன்படுத்தி வாக்களிக்கலாம்.

கட் ஆப் தேதியான **செப்டம்பர் 19, 2024** அன்று உறுப்பினர்கள் பதிவேடு அல்லது டெபாசிட்டரிகளால் பராமரிக்கப்படும் பயன் பெறும் உரிமையாளர்கள் பட்டியலில் பதிவாகி உள்ள பெயரில் உள்ள நபர் மட்டுமே பொதுக்கூட்டத்தில் தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு அல்லது வாக்களிக்கும் வசதியை பெற தகுதி உடையவர் ஆவர்.

தங்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் கூட்டத்தில் கலந்து கொள்ள விரும்பும் கார்ப்பரேட் உறுப்பினர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ள அவர்களின் பிரதிநிதிகளுக்கு அங்கீகாரம் அளிக்க குழு தீர்மானம்/பவர் ஆப் அட்டர்னியின் முறையாக சான்றளிக்கப்பட்ட நகலை **papin.secretary@in.panasonic.com**-க்கு மின்னஞ்சல் மூலம் நிறுவனத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது தங்கள் கருத்துகளை வெளிப்படுத்த அல்லது கேள்விகளைக் கேட்க விரும்பும் உறுப்பினர்கள் தங்களின் பெயர், டிபி ஐடி மற்றும் கிளையண்ட் ஐடி/போலியோ எண். பான், மொபைல் எண். ஆகியவற்றைக் குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரியிலிருந்து தங்கள் கோரிக்கையை **papin.secretary@in.panasonic.com**-க்கு **வியாழக்கிழமை, செப்டம்பர் 19, 2024 காலை 9.00 மணி** முதல் **சனிக்கிழமை, செப்டம்பர் 21, 2024 மாலை 5.00 மணி** வரை அனுப்பி தங்களை பேச்சாளராக பதிவு செய்யலாம். தங்களை ஒரு பேச்சாளராக பதிவு செய்த உறுப்பினர்கள் மட்டுமே வருடாந்திர பொதுக்கூட்டத்தின் போது தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த/ கேள்விகளைக் கேட்க அனுமதிக்கப்படுவார்கள். வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கிடைக்கும் நேரத்தைப் பொறுத்து பேச்சாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் உரிமை நிறுவனத்திற்கு உள்ளது.

தொலைதூர மின்னணு வாக்குப்பதிவின் மூலம் வாக்களித்த உறுப்பினர்கள் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ளலாம் ஆனால் வருடாந்திர பொதுக்கூட்டத்தில் மீண்டும் வாக்களிக்க உரிமை இல்லை.

உறுப்பினர்கள் ஆண்டு பொதுக்கூட்டத்திற்கு முன்பாகவோ அல்லது ஆண்டு பொதுக்கூட்டத்தின் போது அல்லது தொலைதூர மின்னணு வாக்குப்பதிவு தொடர்பாக ஏதேனும் குறைகள்/சந்தேகங்கள் இருப்பின், நேஷனல் செக்யூரிட்டி டெபாசிட்டரி லிமிடெட், 'A' விங், 4வது மாடி, கமலா மில்ஸ் காம்பவுண்ட், சேனாபதி பாபட் மார்க், லோயர் பரேல், மும்பை - 400013-ல் நியமிக்கப்பட்ட மின்னஞ்சல் ஐடி **evoting@nsdl.com** அல்லது நிறுவனத்தின் மின்னஞ்சல் ஐடி **papin.secretary@in.panasonic.com**-ல் தொடர்பு கொள்ளலாம்.

குழுமத்தின் ஆணைப்படி
பானசோனிக் அப்ளையன்சஸ் இந்தியா கம்பெனி லிமிடெட்டுக்காக
ஒப்/-
அஜய் சுக்லா
கம்பெனி செயலாளர்

சென்னை, செப்டம்பர் 5, 2024 ACS No.: 36992

ஆன்லைன் இ-ஏல முறையில் சொத்து விற்பனை

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

பதிவு அலுவலகம்: 27BKC, C-27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை, மகாராஷ்டிரா, பின்கோடு - 400 051
கிளை அலுவலகம்: கோடக் மஹிந்திரா பேங்க், 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணா சாலை, சென்னை 600 006.
லேண்ட் மார்க்: எம்ஜி கார் ஷோரூம் மற்றும் ஆயிரம் விளக்கு மெட்ரோ ரெயில் நிலையம் அருகில்

அசையா சொத்துக்கள் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) விதி 2002 விதி 8(5) மற்றும் விதி 9(1)-ன்கீழ் அசையா சொத்துக்களை விற்பனை செய்ய இ-ஏல விற்பனை அறிவிப்பு பிளாபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (இனி "பிளாபிபிசச்ஸ்லி" என்று குறிப்பிடப்படும்) கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டிற்கு ஆதாரவாக கடனை ஒதுக்கியதன் அடிப்படையில், 18.11.2019 அன்று பிளாபி ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி (இனி "பிளாபிபிசச்ஸ்லி" என்று குறிப்பிடப்படும்) அடமானம் வைக்கப்பட்ட/ஈடாக வைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தை (இனி ஈடுபெற்ற சொத்து என்று அழைக்கப்படும்) கவாதீனம் எடுத்துக் கொண்டார். கடன் கணக்கு எண் HOU/CHE/0717/408845ன் கீழ்; கீழே உள்ள விவரங்களின்படி திரு. ஜெ புஷ்பராஜன் மற்றும் திருமதி. ஜெயந்தி பி ஆகியோர் பெற்ற கடன் தொகையில் 02.09.2024 அன்று வரை செலுத்த வேண்டிய பாக்கித் தொகை ரூ.46,48,372/- (ரூபாய் நாற்பத்தாறு ஆறு லட்சத்து நாற்பத்தெட்டாயிரத்து முன்னூற்று எழுபத்திரண்டு மட்டும்) மற்றும் திரும்ப செலுத்தும் நாள் வரையில் பொருந்தக்கூடிய எதிர்கால வட்டி ஆகியவற்றை திரும்ப பெறுவதற்காக 2002ம் ஆண்டு சர்பாசி சட்டத்தின் விதிகளின் கீழ் "எங்கே எப்படி இருக்கிறதோ அப்படியே, எவ்வாறு உள்ளதோ அது போல்" வங்கியானது மின்னணு ஏலத்தின் மூலம் ஈடுபெற்ற சொத்தை விற்க முடிவு செய்துள்ளது என்று கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாததாரர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது.

விவரங்கள்	விவரங்கள்
ஏலத் தேதி	07.10.2024
ஏலம் நடைபெறும் நேரம்	மதியம் 12:00 முதல் மதியம் 1:00 மணி வரை 5 நிமிட வரம்பற்ற நீட்டிப்புடன்
ரிசர்வ் விலை	ரூ.13,00,000/- (ரூபாய் நான்கு லட்சம் மட்டும்)
டேவனிதி தொகை டெபாசிட் (EMD)	ரூ.1,30,000/- (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்)
Kyc உடன் Emd ஐ சமர்ப்பிப் பதற்கான கடைசி தேதி	05.10.2024 அன்று மாலை 5:00 மணி வரை (இந்திய நேரப்படி)
ஈடுபெற்ற ஆஸ்திகள் குறித்த விவரம்	**அட்டவணை சொத்து A** : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், சர்வே எண். 218/2, 223/5, 223/6, 223/7, 223/8, 223/9, 223/10, 223/11, 223/12, 223/13, 223/14, 223/15, 223/16, 223/17, 223/18, 223/19, 223/20, 224/1, 224/2a, 224/2b, 224/6, 224/7a1, 224/7a2, 224/7b, 224/10, 224/11a, 224/11b, 224/11c, 224/12, 224/13a, 224/13b, 224/14, 224/15, 224/16, 224/20, 224/22, 224/23, 224/24, 224/27a, 224/27b, 224/24c, 224/27d, 227/28, 227/29, 227/30, பீனிக்ஸ் சிட்டி என பெயரிடப்பட்டு வீட்டு மனைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மனை எண். 127, பண்டிட்டு கிராமம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் வாலாஜாபாத் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது. **அட்டவணை சொத்து B** : சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும், காலி வீட்டு மனை. மனை எண்.61, விஸ்தீரணம் 2100 சதுர அடி, காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தாலுகா, பண்டிட்டு கிராமத்தில் உள்ள பீனிக்ஸ் சிட்டி சர்வே எண்.224/23, 24, DTCP NO.LP/DDTCP(CR) எண்.54/2016 தேதியிட்டது மற்றும் மனை எண்.51, எல்லைகள் : கிழக்கு : மனை எண்.52, மேற்கு : மனை எண்.60, வடக்கு : 30 அடி சாலை, தெற்கு : மனை எண்.53 மற்றும் விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம் : 30 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம் : 30 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம் : 70 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம் : 70 அடி, மொத்தம் 2100 சதுர அடி மற்றும் காஞ்சிபுரம் பதிவு மாவட்டம் மற்றும் வாலாஜாபாத் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.
தெரிந்தவரை விலைங்கள் : இல்லை	

சர்பாசி சட்டப் பிரிவு 13-ன் உப பிரிவு 8-ன் கீழ், கால அவகாசம் உள்ளதால் ஈடுபெற்ற ஆஸ்திகளை மீட்டுக் கொள்ள கடன்தாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது. எந்தவொரு காரணத்திற்காகவும் இங்கு திட்டமிடப்பட்ட ஏலம் தோல்வியுற்றால், ஈடுபெற்ற கடன் வழங்கியவர், பகுதிப் பணம் தனியார் ஒப்பந்தம் மூலம் விற்பனை செய்யலாம் என்று பொது மக்களுக்கு பொதுவாகவும் கடன்தாரர்களுக்கு குறிப்பாகவும் இதன்மூலம் தெரிவிக்கப்படுகிறது. விற்பனை செய்யப்பட உள்ள சொத்துக்கள் குறித்து ஏதேனும் சந்தேகங்கள்/தேவைகள் இருப்பின் அது குறித்து ஏலதாரர்கள் திரு. விபாஸ் நம்பூரி (+91 9677288418) & திரு. வேல்முருகன் சுதிர்வேல் (+91 9152219751). ஆதிகியோரை தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களை அறிந்து கொள்ள ஏலதாரர் வங்கியின் VR எண் (+919152219751) ஐ தொடர்பு கொள்ளலாம். விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் இணையதளம் www.kotak.com-ல் அளிக்கப்பட்டுள்ள லிங்க் https://www.kotak.com/en/bank-auctions.html மற்றும்/அல்லது https://bankauctions.in-ல் பார்வையிடலாம்.

இடம் : சென்னை, தேதி 05.09.2024 அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட் சுவராதீன அறிவிப்பு

பதிவு அலுவலகம்: 27BKC, C 27, G - பிளாக், பந்த்ரா குர்லா காம்ப்ளக்ஸ், பந்த்ரா (கி), மும்பை 400 051
கிளை அலுவலகம்: 185, 2வது தளம், மவுண்ட் ரோடு, அண்ணாசாலை, சென்னை 600 006

கோடக் மஹிந்திரா பேங்க் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் (54 ஆப் 2002) கீழும் மற்றும் பிரிவு 13(12)ன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படியும், 2002ம் வருடத்திய கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்க) விதிமுறைகளின் 2வது விதிமுறைக்கு ஏற்ப, கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, தி